பக்கங்கள் 20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 20 திங்கட்கிழமை 5.08.2024 | அதிர்வு 003

## ரோஹித எம்.பியும் ரணிலுக்கு ஆதரவு



ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 04▶

## 100 இற்கும் மேற்பட்ட எம்.பிக்கள் ரணிலுக்கு ஆதரவு

வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 100 ஐத் தாண்டிவிட்டது என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்கள் யாரென்ற விபரம் விரைவில் வெளிப்படுத்தப்படும் என்று அந்தத் தகவல் மேலும் கூறுகின்றது.

ரணிலுக்கான எம்.பிக்களின் ஆதரவைத் திரட்டும் பணியில் மும்முரமாக இறங்கியுள்ளது அரசு .மொட்டு எம்.பிக்கள், ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் எனப் பல்வேறு கட்சிகளின் எம்.பிக்களுடன் அரச தரப்பு பேச்சு நடத்தி வருகின்றது.

வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளுடனும் அரச தரப்பு பேச்சு நடத்தி வருகின்றது.

இந்த நடவடிக்கையின் பயனாக பல எம்.பிக்கள் ரணிலின் பக்கம் சாய்ந்துள்ளனர் என்றும், 100 எம்.பிக்களுக்கு அதிகமானவர்கள் ரணிலுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர் என்றும் அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ‘மொட்டு’விடம் எஞ்சியிருக்கும் 20 எம்.பிக்களையும் வளைக்க ரணில் தரப்பு கடும் பிரயத்தனம்

## 15 ஆம் திகதிக்கு முன் பேச்சுக்கு ஏற்பாடு

**ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ராஜபக்ஷக்கள் பக்கம் தற்போது எஞ்சியிருக்கும் மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 பேருடன் அரச தரப்பு பேசுவதற்கு முடிவெடுத்துள்ளது என்று அறியமுடிகின்றது.** 04▶



## இரணைதீவில் 207 கிலோ கஞ்சா நேற்று கடற்படையிடம் சிக்கியது!

### சந்தேகநபர்கள் எவரும் கைதாகவில்லை



(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 207 கிலோகிராம் கஞ்சா, கிளிநொச்சி - இரணைதீவுப் பகுதியில் கடற்படையினரால் நேற்று கைப்பற்றப்பட்டது.

இந்தியாவில் இருந்து படகில் கடத்தி வந்து இரணைதீவில் ஆள்கள் அற்ற பகுதியில் மறைத்து வைத்திருத்த சமயமே நேற்று மாலை கடற்படையினரின் ரோந்து அணியினர் இந்தக் கஞ்சாவைக் கைப்பற்றினர்.

97 பார்சல்களில் பொதி செய்த 207 கிலோகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டபோதும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

கைப்பற்றப்பட்ட கஞ்சா மேலதிக சட்ட நடவடிக்கைக்காக 04▶




ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி பிரிந்து, பெரும் எண்ணிக்கையான எம்.பிக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பின்னால் அணிவகுத்துள்ளனர் என்றுகூறப்படும்நிலையில் –

ஆளுந்தரப்பு நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை இழந்துவிட்டதாக கூறப்படும் சூழலில் –

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் ஒன்றரை மாதங்களே இருக்கும் நிலையில் –

அதற்கிடையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த அரசை வீழ்த்தும் எண்ணம் ஏதும் இல்லை என்று மொட்டுக் கட்சியின் தலைவர்கள் கோடி காட்டி வருகையில் –

மிக முக்கியமான கட்டத்தில் நாளை நாடாளுமன்றம் மீண்டும் கூடுகின்றது.

மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தை மீள நடைமுறைக்குக் கொண்டு 04▶

# தேர்தல் சட்ட மீறல் முறைப்பாடுகளைத் தெரியப்படுத்த மனித உரிமை ஆணைக்குழு விசேட வேலைத்திட்டம்

ஜனாதிபதித் தேர்தலின் போது, அரச அதிகாரிகளால், தேர்தல் சட்டம் மீறப்படுமாயின் அது தொடர்பில், முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

அதன்படி 076-7914696 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது 011-2505566 என்ற தொலைநகல் இலக்கத்திற்கோ முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியும் என அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என இலங்கை




மனித உரிமை ஆணைக்குழு அண்மையில் வழிகாட்டல்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு சிகரெட்டுகளை கடத்த முயன்ற நபர் கைது!



சட்டவிரோதமான முறையில் 18 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளை கடத்த முயன்ற ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு, பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் பயணப்பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், வெளிநாட்டுத் தயாரிப்பிலான 12 ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர் கல்முனை பகுதியைச் சேர்ந்த 48 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# யாழ்ப்பாணம் உணவுத் திருவிழாவும் விற்பனைக் கண்காட்சியும் இன்று

யாழ்பாண மாவட்ட உணவுத் திருவிழாவும் விற்பனைக் கண்காட்சியும் இன்று ஆரம்பமாகவுள்ளன.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கண்காட்சி நாளை மறுதினம் 7ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட முயற்சியாளர் சங்கம் இந்தக் கண்காட்சியை நடாத்தவுள்ளது.

இதில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்து பல்வேறு வகையான உணவுப் பொருள்கள் காட்சிப்படுத்தப்படுவதுடன் பல்வேறு வகையான உள்ளூர் உற்பத்திப் பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனையும் இடம்பெறவுள்ளது.

இங்குள்ள அனைத்து தரப்பினரும் இத் திருவிழா விற்பனைக் கண்காட்சிக்கு வருகை தந்து பல்வேறு நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும். எனவே மூன்று நாள்கள் இடம்பெறவுள்ள இக் கண்காட்சியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கண்காட்சி குறித்து விளக்கம் அளிக்கும் ஊடக வியலாளர் மாநாடு நேற்று யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்றது.

# இருளை இறந்த காலத்திடம் ஒப்படைத்துவிட்டு நாட்டுக்கு வளமான விடியலை உருவாக்க முடியும்

## அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு



"நான் ஓர் உத்தரவாதத்தைக் கொடுக்கிறேன். நீங்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு கடுகளவேனும் பங்க மேற்பட இடமளிக்கமாட்டோம். எமது நாடு பாரிய சீர்குலை வினை எதிர்நோக்கியதால் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட வர்களாக இருப்பது நீங்கள்தான்."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற மாற்றுத்திறனாளிகள் பற்றிய தேசிய மக்கள் சக்தியின் தேசிய கொள்கையையும் வேலைத் திட்டத்தையும் வெளியிடுதல் நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அநுர குமார திசாநாயக்க மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"பல்வேறு துறைகளில் உடலியலாமை நிலையுற்றவர்கள் தம்மை பாதித்துள்ள நிலைமைகள் பற்றிய விவரங்களை பலவிதமாக எம்மிடம் முன்வைத்தார்கள். அதைப்போலவே தமது திறன்களையும் ஆற்றல்களையும் இந்த மேடையில் வெளிக்காட்டினார்கள். அவற்றைப் பார்க்கும்போது நாங் கள் எந்தளவுக்கு இரக்கமற்ற சமூகமொன்றில் எவ்வளவு நியாயமற்ற சுற்றுச்சூழலில் வாழ்கிறோம் என்பதே ஞாப கத்திற்கு வருகின்றது.

நான் ஓர் உத்தரவாதத்தைக் கொடுக்கிறேன். நீங்கள் எம் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு கடுகளவேனும் பங்க மேற்பட இடமளிக்கமாட்டோம். எமது நாடு பாரிய சீர்குலை வினை எதிர்நோக்கியதால் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட வர்களாக இருப்பது நீங்கள்தான். நாடு எவ்வளவுதான் சீர்குலைவிற்கு இலக்காகியிருப்பினும் அது தொடர்பில் எந்தவிதமான குற்றச்சாட்டும் இங்கு குழுமியுள்ள உங்கள் மீது முன்வைக்கப்படவில்லை.

கண்கள் தெரிகின்ற, காதுகள் கேட்கின்ற, சரியான அசைவுகளைக் கொண்டுள்ளவர்கள்தான் நீண்டகாலமாக எங்கள் நாட்டை ஆட்சிசெய்தார்கள். அதன் பாதக விளைவுகள் ஒட்டுமொத்த சமூகத்தையும் ஆரத்தழுவி உள்ளன. உங்களைப் பார்க்கும்போது, உங்களின் பேச்சுகளை செவிமடுக்கும்போது, உங்கள் திறமைகள் வெளிப்படுத்தப்படுகையில் நாங்கள் ஏன் இவ்வளவு தாமதித்திருக்கிறோம் என்ற உணர்வு எமக்கு ஏற்படுகின்றது. இந்த இருளை இறந்தகாலத்திடம் ஒப்படைத்து விட்டு எமது நாட்டுக்கு வளமான விடியலை உருவாக்கிட முடியுமென்ற நம்பிக்கை எம்மிடம் நிலவுகின்றது.

எம்மோடு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற சகோ தரர்கள், பழகிய குழுவினர் இங்கே இருக்கிறார்கள். இடைக் கிடையே சந்தித்திருக்கிறோம். சந்தித்த எல்லாச் சந்தர்ப்பங் களையும்விட இன்று எம்மனைவரதும் கண்கள் அகலத்தி றந்துவிட்டன என நினைக்கிறோம். எம்மனைவருக்காகவும் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கமொன்றை அமைத்துக் கொள்வோமென அழைப்பு விடுக்கிறோம். நாம் எதிர் நோக்குகின்ற சிக்கல்களை கடவுளின் விருப்பம் அல்லது பூர்வஜென்மபலன் என நினைத்து மனதை தேற்றிக் கொண்டோம்.

உலகம் முன்நோக்கி நகர்ந்து கைத்தொழில் புரட்சி இடம்பெறுகையில் அந்த கைத்தொழில் புரட்சியால் உறிஞ் சிக்கொள்ள முடியாமல் போன பிரிவினரை வலதுகுறைந்த ஆள்கள் என அழைத்தோம். அவர்களை தனிமைப்படுத் தினோம். எனினும் சமூகத்தின் மற்றுமொரு படிமுறையில் அவர்களை கவனித்துக்கொள்வது இரக்கசிந்தை அல்லது புண்ணிய கருமம் எனவும் பிறர்மீது பரிவிரக்கம் காட்டு தல் போன்ற உணர்விற்கு கட்டுப்படுத்தி நலனோம்பலை வழங்கினோம்.

எனினும் ஐக்கிய நாடுகள் அங்கீகரித்துக்கொண்ட பிரே ரணைக்கிணங்க இந்த மக்களின் உரிமைகள் என்றவகை யிலான அடிப்படை விடயங்கள் அறிமுகஞ்செய்யப்பட்டு நீண்ட முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. ஒருசில அரசுகள் இந்த சமுதாயத்திற்கு சமத்துவமான உரிமை களை வழங்கியுள்ளன.

பொலிஸில்சென்று ஒருவரிடம் கேள்விகேட்கும் போது 'ஊமைபோல் இருக்காமல் பேசு' எனக் கூறுவார்கள். அந்த இடத்தில் இருப்பது பேசாதிருத்தல் பற்றிய பிரச்சினை யல்ல. அவமதிப்பிற்கு உள்ளாக்குதலும் அச்சுறுத்தலுமா கும். மற்றுமொரு சந்தர்ப்பத்தில் "செவிடன்போல் இருக்க வேண்டாம்" என்பார்கள். மற்றவரை நோகடித்திட, பிறரை அவமதிக்க மற்றவர்களின் உறுப்புகளை பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

நாமனைவரும் தவப்புதல்வர்களல்ல. ஒருசில பண்புக ளால் ஒருசில பரிபூரணமின்மை நிலவுகின்றது. நீங்களும் மற்றவர்களைப்போல் சமத்துவமான உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான கொள்கைகளை வகுப்பதும் அமுலாக்குவ துமே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முக்கியமான குறிக்கோளாகும். தேர்தலின்போது முன்வைக்கப்படு கின்ற கொள்கை வெளியீட்டினை பாரதூரமானதாக எடுத்துக் கொள்ள வேண்டாமென தொலைக்காட்சி உரையாடலின் போது ஆட்சியாளர்கள் கூறியது எமக்கு ஞாபகமிருக்கிறது.

எனினும் கொள்கை வெளியீடு என்பது ஏதேனுமோர் அரசியல் இயக்கத்தை அதிகாரத்திற்கு கொண்டுவருவ தற்காக ஏற்படுத்திக்கொள்கின்ற இணக்கப்பாடாகும். அத னால் கொள்கை வெளியீடுதான் வாக்காளர்களுக்கும் ஆட்சியாளனுக்கும் இடையில் கட்டியெழுப்பப்படுகின்ற உடன்பாடு. இந்த உடன்பாட்டினை சிதைக்கஇ ஒருபுறம் ஒதுக்கிவைக்கஇ பொருட்படுத்தாமல்விட எமக்கு உரிமை யில்லை. நாங்கள் இந்த உடன்பாட்டினை அமுலாக்குவ தற்காக கடப்பாடு கொண்டுள்ளோம்.

ஒரு யுகத்தில் இருந்த குழப்பமான பிரச்சினைகள் இன்று குழப்பமானவையல்ல. ஏதெனுமொரு இயலாமைநிலை கொண்டுள்ள ஒருவருக்கு சமூகத்தில் ஏனையோர் அனுப வித்து வருகின்ற அனைத்தையும் அனுபவிப்பது சிரமமான கருமமல்ல. பொருட்படுத்தாமல் விடுவதே இடம்பெற்றுள்ளது. இயலாமை நிலையுற்ற எவரும் எந்த மட்டத்தில் இருந்தா லும் செலியுலர் போனை பாவிக்கக்கூடிய நிலைமைக்கு தொழில்நுட்பம் முன்னேற்றமடைந்துள்ளது." – என்றார்.





# திருமலை மாவட்ட மக்களுடன் ஜனாதிபதி சந்திப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் திருகோணமலை மாவட்ட மக்களுக்கும் இடையில் விசேட சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பு திருகோணமலை நகராட்சி மண்டபத்தில் நேற்று மதியம் இடம்பெற்றது.

இதன்போது, திருக்கோணேஸ்வரம் ஆலய விவகாரம், அரச திணைக்களால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களுடைய காணிகள் விடுவிப்பு, மக்கெய்சர் விளையாட்டரங்கு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் உட்பட 13 முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் மற்றும் அரசியல் பிரமுகர்கள், துறைசார் வல்லுநர்கள் உட்பட 500 இற்கும் மேற்பட்ட பாதுமக்கள் கலந்துகொண்டனர்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருவதற்கு வழி செய்யும் - எம்.ஏ. சுமந்திரனின் தனி நபர் சட்டமூலப் பிரேரணையான - மாகாண சபைகள் தேர்தல் சட்ட மூலம் நாளை காலை 10 மணிக்கு நாடாளுமன்றத்தில் இரண்டாவது வாசிப்பு விவாதத்துக்கு எடுக்கப்படுவதாக நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் அந்த நிகழ்ச்சி நிரலின்படி அதற்கு - அந்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கு - அரசினால் ஆக முப்பது நிமிடங்கள் தான் வழங்கப்பட்டுள்ளன.

அந்த 30 நிமிடங்களில் தமது சட்ட மூலத்தை சமர்ப்பித்து உரையாற்ற சுமந்திரனுக்கு ஆக ஒரு பத்து நிமிடம் வழங்கப்பட்டால், அடுத்த 20 நிமிடங்களுக்குள் அதிக விவாதமின்றி அந்தச் சட்டம் மூலம் நிறைவேற்றப்பட்டு விடுமா என்ற கேள்வி எழுகின்றது.

எல்லா தரப்புக்களும் சேர்ந்து ஏகமனதாக செயற்படுமானால் அந்த குறுகிய நேர இடைவெளியில் சட்டமூலத்தை நிறைவேற்றுவது சாத்தியமானதே.

ஏற்கனவே, இருக்கும் மாகாண சபை தேர்தல் சட்டத்தை மீளக் கொண்டு வந்து, மாகாண சபை தேர்தலை விரைந்து மீளவும் நடத்த வேண்டும் என்ற விடயத்தில் பெரும்பாலும் ஒரு நிலைப்பட்ட கருத்தமைவு அனைத்து கட்சிகளிடமும் காணப்படுகின்றது.

அரசியல் நிலைப்பாடுகள் துறந்து, இந்தச் சட்ட மூலத்துக்கு அனைத்து கட்சிகளும் ஆதரவு தரும் என்று எதிர்பார்க்கப்படுவதால் அரை மணி நேரத்தில் அந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றி விடயத்தை ஒப்பேற்றி விடலாம் எனக் கருதித்தான், அப்படி ஆக 30 நிமிட நேரம் மட்டுமே அந்த சட்டமூலத்திற்கு வழங்கப்பட்டதா என்றும் கேட்கப்படுகின்றது.

ஆளும் தரப்பு என்ன நிலைப்பாட்டில் இந்தச் சட்ட மூலத்தின் இரண்டாவது வாசிப்புக்கு ஆக 30 நிமிட நேரத்தை மட்டுமே ஒதுக்கியது என்ற கேள்விக்கு நாளை முற்பகல் பதில் தெரிந்து விடும். அதுவரை பொறுத்திருப்போம்.

\+ + +

மொட்டுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் பலரும் ரணில் விக்கிரமசிங்கவின் பின்னால் அணி வகுத்தமையை அடுத்து, மொட்டுக் கட்சியின் மாவட்ட தலைவர்கள் பலரும் புதிதாக நியமிக்கப்படுகின்றார்கள்.

அந்த வரிசையில் முன்னர் எஸ்.எம் சந்திரசேன தலைவராக இருந்த அநுராதபுரம் மாவட்டத்திற்கு நாமல் ராஜபக்ஷ, தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். வரும் பொதுத்தேர்தலில் மொட்டுக் கட்சியின் அனுராதபுரம் பகுதி தலைமை வேட்பாளர் அவரே என்று மொட்டுக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## இரணைதீவில் 207...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முழங்காவில் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் 8 கோடி 50 இலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது.

## ரோஹித எம்.பியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சியின் ஏற்பாட்டாளர் ரோஹித அபேகுணவர்தன தீர்மானித்துள்ளார்.

தமது தொகுதி மக்களுடன் கலந்துரையாடிய பின்னரே அவர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

ராஜபக்ஷக்களின் மிகவும் நெருங்கிய சகாவாக இவர் கருதப்படுகின்றார்.

களுத்துறைப் பகுதியில் இவர் 'ரத்தராங்' (தங்கம்) என்றே அழைக்கப்பட்டு வருகின்றார்.

## மொட்டுவிடம் எஞ்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் இந்தச் சந்திப்பை ஒழுங்குபடுத்தியுள்ளார் என்றும் அந்தத் தகவல் மேலும் கூறுகின்றது.

மேற்படி 20 எம்.பிக்களும் மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் தீவிர விசுவாசிகள் என்றும் தெரியவந்துள்ளது.

## நமது கருத்து

# வாலைப் பிடிக்கும் மூடர்கள்

‘தும்பை விட்டு வாலைப் பிடிப்பது’ என்பார்கள்.

மாட்டையோ கன்றையோ முளைக்குச்சியில் கட்டிப் போடுவதற்காக அதன் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் நீளமில்லாத கயிற்றைத் தும்பு என்பார்கள். மாட்டைக் கட்டிப் போட வேண்டும் என்றால் தும்பைத்தான் பலமாகப் பிடிக்க வேண்டுமே தவிர, அதன் வாலை அல்ல. வாலைப் பிடித்தால் என்னவாகும்? மாடு மிரண்டு ஓடிவிடும். காரியம் விட்டுவிடும்.

இப்படிக் காரியம் கெட்டுவிடும் வேலையைத்தான் - தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் வேலையைத்தான் - தமிழ்த் தேசியம் பேசும் நமது தலைவர்கள் பலரும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

களப்புற நிலைகள் - யதார்த்த உண்மைகள் - தெரியாமல், தேசியம் பற்றிய நிலைவரங்கள் புரியாமல், கொள்கை, சிந்தனை பற்றிய எண்ண ஓட்டத்தில், அவர்கள் அப்படி செயற்படுகின்றார்கள். இல்லாவிட்டால் அவை எல்லாம் தெரிந்தும் அரசியல் ஆதரவு தளத்தை வலுவாகப் பேணுவதற்காக தமிழ் தேசிய காவலர்களாகத் தங்களை காட்டும் நடிப்பில் அப்படி செயற்படுகின்றார்கள்.

தமிழ்த் தேசியத்திற்காக - அதனை நிலை நிறுத்துவதற்காக - நாம் ஆயுத பலத்துடன் முன்னெடுத்த வலிமையான போராட்டம் அதே ஆயுத முனையில் - அரச பயங்கரவாதத்தினால் - முறியடிக்கப்பட்டு விட்டது.

இப்போது நம் மண்ணை - எமது தாயகத்தை - எமது பண்பாட்டை - எமது இனத்த தனித்துவத்தை - எமது மொழியை - எமது மக்களின் வரலாற்று விழுமியங்களை - பாதுகாத்துப் பேண முடியாத கையறு நிலையில் நாம் தள்ளாடுகின்றோம்.

நமது இழிநிலை உணர்ந்து எதிரி எங்கள் தாயகத்தை - அதன் தனித்துவத்தை - அதன் இருப்பை - சிதைத்தழிக்கக் கங்கணம் கட்டிச் செயல்படுகின்றான்.

தினமும் நமது தாயகம் பேரினவாத ஆதிக்க தரப்பினால் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கொஞ்சம் கொஞ்சமாக தாயகத்தை இழந்து கொண்டிருக்கிறோம்.

இப்போது தமிழ்த் தேசியத்தை வாயால் வெட்டி விழுத்திப் பேசி, வாய்ச்சொல் வீரராய் முண்டியடித்து, அரசியல் நாடகம் நடத்துவது அல்ல நாம் செய்ய வேண்டிய காரியம். மாறாக, இனத்தின் இருப்பை - தாயகத்தை - பறிபோகாமல் காப்பாற்றி, அந்தச் சூறையாடலுக்கு எதிராக அணை கட்டுவதுதான் நமது பிரதான காரியமாக - பொறுப்பாக - இருக்க வேண்டும்.

தேசியத்தை நிலை நிறுத்துவது என்ற பெயரில் பொது வேட்பாளரை நிறுத்தி, தென்னிலங்கையைச் சீண்டி, பேரினவாத ஆக்கிரமிப்புக்கு அத்தரப்பை மேலும் தூண்டிவிடுவது தமிழ் தேசியத்தின் பெயரால் மேலும் அழிவு வேலைக்கு வழி செய்யும் தற்குறித்தனம்.

மாறாக, மாகாண சபைகளுக்கு அரசமைப்பில் உள்ள காணி அதிகாரத்தைகிட்டச் செய்யும் விதத்தில் அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு, மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட மாகாண சபைகளை வடக்கு, கிழக்கில் இயக்கினால், அவை மூலம் தமிழர் தாயகத்தின் நிலச்சுரண்டலை - ஆக்கிரமிப்பை - தொண்ணூறு வீதமாவது அடியோடு குறைக்கச் செய்ய முடியும். அதனைச் செய்ய வேண்டும்.

இந்தத் தேர்தல் சமயத்தில் காணி அதிகாரங்கள் மாகாண சபைகளின் கைகளுக்கு வரக்கூடியதாக காணி ஆணைக்குழு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் விரைந்து நிறைவேற்ற செய்வதும், பறிபோகும் தாயக நிலத்தை ஓரளவு பாதுகாப்பதற்கு விரைந்து நாம் செய்யக்கூடிய நடவடிக்கையாக இருக்க வேண்டும். இருக்க முடியும்

தேசியத்தை நிலை நிறுத்துதல் என்ற பெயரில் இப்போது தும்பை பிடிப்பதை விடுத்து, நமது தாயகம் பறிபோவதை தடுக்கும் விதத்தில் சட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளை இந்தத் தேர்தலை தந்திரமாகப் பயன்படுத்தி முன்னெடுப்பதுதான் தும்பை பிடிப்பதாக அமையும்.



# மத்தியப் பிரதேசத்தில் மத நிகழ்வில் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்து விபத்து

## 9 குழந்தைகள் பலி

மத்தியப் பிரதேசத்தில் மத நிகழ்வில் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்ததில் 9 குழந்தைகள் உயிரிழந்தனர். மத்தியப் பிரதேச மாநிலம் சாகர் மாவட்டம் ஷாபூர் கிராமத்தில் இத்துயரச் சம்பவம் நடந்துள்ளது.

இது தொடர்பாக சாகர் பகுதி பொலிஸ் ஆணையர் வீரேந்திரா சிங் ராவத் கூறுகையில்,

“எங்களுக்குக் கிடைத்த தவலின்படி சாகர் மாவட்டம் ஷாபூரில் நடந்த ஹர்தல் பாபா மத நிகழ்வின்போது நிகழ்ச்சி நடந்த அரங்கின் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்ததில் இந்த விபத்து நடந்துள்ளது. இதுவரை 9 குழந்தைகள் உயிரிழந்ததும் உறுதியாகியுள்ளது. அவர்கள் அனைவரும் 10 முதல் 15 வயதுக்கு உட்பட்டவர்களாவர்.” – என்றார்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவ இடத்தில் உடனடியாக பொலிஸ், உள்ளூர்வாசிகள் இடிபாடுகளை அகற்றினர். தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் விபத்து குறித்து முதல்வர் மோகன் யாதவ் கூறுகையில்,

“விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் மீண்டுவர வாழ்த்துகிறேன். உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு சார்பில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு தலா 4 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கப்படும்” என்று கூறியுள்ளார்.

கடந்த ஜூலை மாதம் உத்தரப் பிரதேசத்தில் ஒரு வழிபாட்டு நிகழ்ச்சியின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 120 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது நினைவுகூரத்தக்கது.

# மத்திய பட்ஜெட்டில் தமிழகம் புறக்கணிப்பு: 14 ஆம் திகதி ம.தி.மு.க. கண்டன ஆர்ப்பாட்டம்

மத்திய பட்ஜெட்டில் தமிழகம் புறக்கணிக்கப்பட்டதை கண்டித்து ஒகஸ்ட் 14 இல் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என ம.தி.மு.க. பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ம.தி.மு.கவின் ஆவது பொதுக்குழு கட்சியின் அவைத் தலைவர் ஆடிட்டர் ஆ. அர்ஜ/னராஜ் தலைமையில் சென்னையில் நடைபெற்றது.

இதில் கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ சிறப்புரை ஆற்றினார். கட்சியின் பொருளாளர் மு.செந்திலதிபன், முதன்மைச் செயலாளர் துரை வைகோ எம்.பி., துணைப் பொதுச்செயலாளர்கள் மல்லை சி.ஏ.சத்யா, செஞ்சி ஏ.கே. மணி, ஆடுதுறை இரா.முருகன், தி.மு.ராஜேந்திரன், டாக்டர் ரொஹையா மற்றும் 1,350 பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

மக்களவைத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை புரிந்து கொண்டு பா.ஜ.க. தனது இந்துத்துவா செயல் திட்டங்களைக் கைவிட வேண்டும். தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான இண்டியா கூட்டணிக்கு பெருவெற்றியை அளித்த வாக்காளர்களுக்கு நன்றி. திருச்சியில் ம.தி.மு.க. வேட்பாளர் வெற்றிக்கு துணை நின்ற முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட அனைத்து தலைவர்களுக்கும் நன்றி. வெற்றி பெற்ற முதன்மைச் செயலாளர் துரைவைகோவுக்கு பாராட்டுகள். மத்திய நிதிநிலை அறிக்கையில் தமிழகம் புறக்கணிக்கப்பட்டதற்கு கடும் கண்டனம்.



பேரிடர் நிவாரண நிதியாக 7 ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற முதல்வரின் கோரிக்கையை அலட்சியப்படுத்தியதைக் கண்டித்தும், நீட் தேர்வு ரத்து உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தும் ஒகஸ்ட் 14 இல் காலை 10 மணிக்கு ம.தி.மு.க. சார்பில் மாவட்டத் தலைநகரங்களில் உள்ள மத்திய அரசு அலுவலகங்கள் முன் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



# பங்களாதேஷில் மீண்டும் கலவரம் வெடிப்பு: 70 பேர் பலி, 3 நாள்கள் பொது விடுமுறை

பங்களாதேஷின் பிரதமர் ஷேக் ஹசீனாவை பதவி விலகுமாறு கோரி அந்த நாட்டில் மீண்டும் போராட்டங்கள் வலுப்பெற்று வருகின்றன.

அதற்கமைய நேற்று இடம்பெற்ற மோதல் காரணமாக 70 இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று நடத்தப்பட்ட போராட்டங்களைக் கலைப்பதற்காக பங்களாதேஷ் பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த் தாரை பிரயோகங்களை நடத்தினர்.

அதேநேரம் பங்களாதேஷில் நேற்று காலை 6 மணி முதல் மறு அறிவித்தல் வரை, முழுமையான ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் இன்று முதல் 3 நாள்கள் பொது விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஷேக் ஹசீனாவை பதவி விலகுமாறு கோரி அந்த நாட்டின் பல்கலைக்கழக மாணவர்கள் இந்தப் போராட்டங்களை முன்னெடுத்தனர்.

பின்னர் அவர்கள் முன்னெடுத்த போராட்டம் அந்த நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டதுடன், நாட்டின் முக்கிய நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பல இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதனையடுத்து பங்களாதேஷ் முழுவதும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

இந்த நிலையில் தற்போது வீதிகளில் இறங்கிப் போராடுபவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் அல்ல எனவும் தேசத்தைச் சீர்குலைக்கும் பயங்கரவாதிகள் எனவும் பங்களாதேஷின் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.







## ஈரான் - இஸ்ரேல் போர் பதற்றம்:

# அமெரிக்க இராணுவ ஜெனரல் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பயணம்

ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியா படுகொலைக்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளதால் அமெரிக்க இராணுவ ஜெனரல் மைக்கேல் குரில்லா மத்திய கிழக்கு நாடுகளுக்கு பயணம் செய்துள்ளார்.

இந்த பயணம் ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒன்று. இஸ்ரேலுக்கு ஆதரவு திரட்டும் முயற்சியின் பகுதியாக அமெரிக்க இராணுவ ஜெனரல் மைக்கேல் குரில்லாவின் இந்த பயணம் திட்ட மிடப்பட்டுள்ளது. எனினும், இந்த பயணத்துக்கு முன்னதாக மத்திய கிழக்கில் போர் நிலவும் சூழல் ஏற்பட்டுள்ளது.

ஈரான் ஜனாதிபதி மசூத் பெஸ்கியான் பதவியேற்பு விழாவில் பங்கேற்க, ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியா ஈரான் சென்றார்.

ஜூலை 31 இல் தலைநகர் டெஹ்ரானில் உள்ள விருந்தினர் இல்லத்தில் தங்கியிருந்தபோது அவர் படுகொலை செய்யப்பட்டார்.

அவரது படுக்கை அறையில் ஏற்கெனவே குண்டு வைக்கப்பட்டிருந்ததாக முன்பு தகவல் வெளியானது.

ஆனால் ஈரான் இராணுவம் நேற்றுவிடுத்த அறிக்கையில், "7 கிலோ எடையுள்ள குறுகிய தூரம் சென்று தாக்கும் ஏவுகணை மூலம் இஸ்மாயில் மீது தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது" என கூறியிருந்தது.






# நிவாரணப் பணிகளுக்காக தமிழக அரசு நிதியுதவி

கேரளா, வயநாட்டின் நிலச்சரிவு நிவாரண பணிகளுக்காக கேரள அரசுக்கு தமிழக அரசினால் 5 கோடி ரூபா வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வயநாடு நிலச்சரிவு நிவாரண பணிகளுக்கு கேரள அரசுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து 5 கோடி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, ரூபா 5 கோடிக்கான காசோலையை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் வேலு, கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயனிடம் நேரில் வழங்கியுள்ளார்.

இந்நிலையில், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட வயநாட்டின் நிவாரணப் பணிகளுக்கான நிதியை வழங்கிய தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு தனது நன்றிகளைத் தெரிவித்த கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், தமிழகத்தின் ஆதரவும் ஒற்றுமையும் மிகவும் பாராட்டப்பட வேண்டியதுடன், மறுவாழ்வு மற்றும் மீள்கட்டமைப்பு முயற்சிகளுக்கு குறித்த நிதி பெரிதும் உதவும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.





# ஞானச்சுடரின் 319 ஆவது மலர் வெளியீடும் உதவித் திட்டங்களும்

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதி யான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த ஆன்மீக வெளியீடான ஞானச்சுடரின் 319 ஆவது வெளியீடு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் உறுப்பினரும் முன்னாள் அதிபருமான ஆ.சிவநாதன் தலைமையில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை செல்வி தயாளினி குமாரசாமியும், மதிப்பீட்டுரையை திருமதி சசிலேகா ஜெயராஜனும் ஆற்றினார்கள்.

அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகளும் வழங்கப்பட்டன.

இதில் உதவித் திட்டங்களாக, யாஃ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலையின் உதைபந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டம் அணியினருக்கான சீருடைகள், கரப்பந்தாட்டப் பந்துகள் கொள்வனவுக்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி என்பன பாடசாலை சமூகத்திடம் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த உதவித் திட்டத்தை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் தொண்டர்கள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் நிர்வாகிகள், உறுப்பினர், பக்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.











# கொழும்பில் ஆடி அமாவாசை தர்ப்பணம்

ஆடி அமாவாசை தினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு காக் கைதீவு முகத்துவாரம் சங்கத்திலும், வெள்ளவத்தை கடற்கரை (மியாமி ஹோட்டலிற்கு முன்பாகவும்) பக்தர்கள் பிதிர்க்கடன்களை தர்ப்பணம் செய்து நிறைவேற்றினர்.

அதற்கு ஏற்ற வகையில் அங்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவ்விடங்களில் கூடிய பக்தர்கள் தம் முன்னோர்களை நினைத்து அந்த ணர்கள் முன்னிலையில் தர்ப் பணம் செய்து தங்கள் பிதிர்க் கடன்களை நிறைவேற்றுவதை காணலாம்.














# தலவாக்கலையில் 22 நாள்களாகக் காணாமல் போயிருந்த 3 மாணவிகளும் மாணவர் ஒருவரும் காலியில் கண்டுபிடிப்பு

**(மஸ்கெலியா, தலவாக்கலை நிருபர்கள்)**

தலவாக்கலை கிறேட் வெஸ்டன் லூசா தோட்டத்தில் 22 நாள்களாக காணாமல் போயிருந்த மூன்று பாடசாலை மாணவிகளும் பாடசாலை மாணவர் ஒருவரும் நேற்று காலி, மெட்டியகொட பிரதேசத்தில் மறைந்திருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் எனத் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 14 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்த தலவாக்கலை, கிறேட் வெஸ்டன் லூசா தோட்டத்தில் வசிக்கும் 16 வயதுடைய பாடசாலை மாணவிகள் மூவரும், 14 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவரும் பொலிஸாரினால் தீவிர தேடலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

அந்த மாணவனும், காணாமல் போன மாணவி ஒருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அக்கா, தம்பி எனவும், மற்றைய இரு மாணவிகளும் அவர்களது வீடுகளுக்கு அருகில் வசிக்கும் இரு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த மாணவனும் மூன்று மாணவிகளும் காலி, மெட்டியகொட பிரதேசத்தில் பதுங்கி இருக்கின்றனர் எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில் தொலைபேசி தரவுகளை ஆராய்ந்து பொலிஸார் மேற்கொண்ட விசேட விசாரணைகளின் பின்னர் நான்கு மாணவர்களும் கண்டுபிடிக்கப்பட்டனர் எனத் தலவாக்கலை பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி, சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் சமந்த பெரேரா தெரிவித்தார்.

இவர்கள் வேலை தேடி காலி,மெட்டியகொட பகுதிக்கு சென்றனர் எனவும், பின்னர் அந்த பகுதியிலுள்ள மாணவர் ஒருவரின் உறவினர் வீட்டில் தங்கியிருந்து வேலை தேடி சென்றனர் எனவும் பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மாணவர்களை நேற்றைய தினமே நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர் தலவாக்கலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

# ஒன்றரை மாத குழந்தை மரணம் தாயார் பொலிஸாரினால் கைது!



யாழ்ப்பாணத்தில் ஒன்றரை மாத குழந்தையின் கைகள் மற்றும் கால்கள் முறிக்கப்பட்டு , சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, குழந்தை உயிரிழந்த சம்பவம் தொடர்பாக குழந்தையின் தாய் தெல்லிப்பழை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பில் குழந்தையின் தாயை வளர்த்த இருவரையும் குழந்தையின் தந்தையும் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளுக்காக அழைத்துள்ளனர்.

அளவெட்டி பகுதியை சேர்ந்த சசிரூபன் நிகாஸ் என்ற ஒன்றரை மாத குழந்தையொன்று நேற்று உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்த பின்னர் குழந்தை அசைவற்று கிடந்ததாக குழந்தையின் தாய் குழந்தையை அளவெட்டி வைத்தியசாலைக்கு நேற்றைய தினம் சனிக்கிழமை கொண்டு சென்றுள்ளார்.

குழந்தையை அங்கிருந்து தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு மாற்றிய போது , குழந்தை உயிரிழந்துள்ளது.

குழந்தையின் உடலில் காயங்கள் காணப்பட்டமையால் , உடற்கூற்றுப் பரிசோதனை நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட வேளை, குழந்தையின் கைகள் மற்றும் கால்கள் முறிந்து இருந்தமை, தலையில் அடிகாயங்கள் காணப்பட்டமை, உடலில் கண்டல் காயங்களும் கண்டறியப்பட்டுள்ளது.

குழந்தையின் மரணம் இயற்கை மரணம் அல்ல என உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குழந்தையின் தந்தை வெளியூரில் தங்கி இருந்து வேலை செய்கிறார் எனவும், தாயின் பராமரிப்பிலையே குழந்தை இருந்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.




# மக்கள் போராட்ட முன்னணியின் கொள்கை அறிக்கை வெளியீடு!

மக்கள் போராட்ட முன்னணியின் கொள்கை அறிக்கை வெளியீடு நேற்று மாலை யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகே, புதிய சனநாயக மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல், மக்கள் போராட்ட முன்னணியின் தேசிய நிறைவேற்று குழு உறுப்பினர்களான ராஜ்குமார் ரஜீவ்காந், துமிந்த நாகமுக, சுவஸ்திகா அருலிங்கம் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு தமது கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

இதன்போது கூட்டத்தில் கலந்துகொண்டவர்களுக்கு மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகேவினால் கொள்கை அறிக்கை புத்தம் வழங்கப்பட்டது.





# தெங்கு பயிர்ச்செய்கையாளர்களுக்கு என விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகம்



தெங்கு பயிர்ச்செய்கையின் போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் அறிவிப்பதற்காகத் துரித தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

அதன்படி 1916 என்ற துரித இலக் கத்திற்குத் தொடர்பு கொண்டு தெங்கு பயிர்ச்செய்கையின் போது ஏற்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என தென்னை அபிவிருத்தி சபை தெரிவித் துள்ளது.

அத்துடன், தெங்கு பயிர்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்காக புதிய தொலைபேசி செயலி ஒன்று அறிமுகப் படுத்தப்படவுள்ளதாக அந்தச் சபை தெரிவித்துள்ளது.

# விக்கிரமபாகு கருணரட்னவின் நினைவு தினம் நேற்று யாழில்!

மறைந்த நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணரட்னவின் நினைவு தினம் நேற்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இடம்பெற்றது.

இதன்போது மறைந்த தலைவரின் திருவுருவப்படத்திற்கு பொது மக்கள் மற்றும் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தினர் சுடரேற்றி, மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரன்நேசனினால் பொதுத் தேர்தல் தொடர்பிலும் தமிழ் மக்களின் உரிமைக்காக தொடர்ந்தும் கொள்கை தவறாது குரல் கொடுத்த விக்கிரமபாகு கருணரட்னா தொடர்பிலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

ஜனாதிபதியின் யாழ் வருகை தொடர்பான விடயங்களும் பேசப்பட்டன. மேலும் தமிழ் தேசிய செயற்பாட்டாளர் செல்வின் இரேனியஸ் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் தொடர்பான ஆதரவு தொடர்பிலும் தேசிய இனப் பிரச்சினை தொடர்பிலும் சுமந்திரன் தெரிவித்த கருத்து தொடர்பாக உரையாற்றினார்.

அத்துடன் நவ சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலரும் ரணத் குமாரசிங்கவும் உரையாற்றினார்.









# மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தோற்சவம்!

(பழுவூரான்)

கிழக்கிலங்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகளி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தோற்சவம் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ,வேத பாராயணங்கள் ஒலிக்க, நேற்று நண்பகல் 12.00 மணிக்கு அமிர்தகளி தீர்த்தக் குளத்தில் இடம்பெற்றது.

தமது தாய், தந்தையரின் ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பிதிர்க்கடனைச் செலுத்தும் வகையில் பல்லாயிரக் கணக்கான பக்த அடியார்கள் வருகை தந்திருந்ததைக் காண முடிந்தது.


நேற்று முன்தினம் சனிக்கிழமை விநாயகப் பெருமான் அழகு ரதம் ஏறி பக்த அடியவர்களுக்கு அருள்பாலித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் நேற்று இடம்பெற்ற தீர்த்தோற்சவத்துடன் ஆலய மகோற்சவம் கொடியிறக்கலுடன் நிறைவு பெற்றது.









# ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுனவின் புதிய மாவட்ட தலைவர்கள் நியமனம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் புதிய மாவட்ட தலைவர்கள் சிலர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய அனுராதபுரம் மாவட்ட தலைவராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக எஸ்.எம்.சந்திரசேன அனுராதபுரம் மாவட்ட தலைவராக செயற்பட்டிருந்தார்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வகித்த கம்பஹா மாவட்ட தலைவர் பதவி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்தவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

கஞ்சன விஜேசேகர வகித்த மாத்தறை மாவட்ட தலைமைத்துவம் நிபுண ரணவக்கவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

காலி மாவட்ட தலைவராக மொஹான் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

காலி மாவட்டத்திற்கான தலைவராக இதுவரை ரமேஷ் பத்திரன செயற்பட்டிருந்தார்.

# ஜனாதிபதி வேட்பாளராக வர்த்தகர் திலித் ஜயவீரவின் பெயர் அறிவிப்பு



சர்வஜன அதிகாரம் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளராக வர்த்தகர் திலித் ஜயவீர அறிவிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் நேற்று மாலை நடைபெற்ற கட்சி மாநாட்டின் போது நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவினால் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

சர்வஜன அதிகாரம் கூட்டணியால் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய அந்த கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக திலித் ஜயவீர அறிவிக்கப்பட்டுள்ளார்.

# அரசாங்கம் அறுதிப் பெரும்பான்மையை இழந்துள்ளது என்கின்றார் ஜி.எல்.பீரிஸ்



அரசாங்கம்தற்போதுதனிப்பெரும்பான்மையை இழந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் 134 வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி தற்போது தமக்கு 92 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவே இருப்பதாகக் கூறுகிறார்.

தற்போதைய அரசாங்கத்தின் ஆயுள்காலம் இன்னும் 46 நாள்களில் முடிவடையும்.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரின் வெற்றியை உறுதிப்படுத்தும் கொள்கை அடித்தளத்துடன் எதிர்வரும் 8 ஆம் திகதி மாபெரும் கூட்டணி உருவாகும்” – என்றார்.



# சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானம்!

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கத் தீர்மானித்திருப்பதாக நேற்று ஞாயிற்றுக்கிழமை கட்சியின் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் நடைபெற்ற கட்சியின் உயர்பீடக் கூட்டத்தின் முடிவில் தலைவர் ரவூப் ஹக்கீம் அங்கு குழுமியிருந்த ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

நாங்கள இன்று இந்த உயர்பீடக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவர் வருகைதராத நிலையில் (அவரும் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணங்குவதாக அறிவித்திருந்த நிலையில்) – முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ்வும் எங்களுடன் உடனிருந்தார் – ஏனைய அனைவரும் ஏகமானதாக ஏற்றுக் கொள்வார்கள் என உத்தரவாதம் அளித்திருந்தனர். கட்சியினுடைய உயர்பீடம் நீண்ட நேரம் பல விடயங்களை கலந்துரையாடியது.மக்கள் எதிர்பார்க்கின்ற சகல விடங்களுக்கும் சரியான தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதோடு எமது சமூகம் சார்ந்த மற்றும் நாட்டின் நலன் சார்ந்த பல விடயங்களை நாங்கள் கலந்தாலோசித்தோம். அதனடிப்படையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் ஆதரவளிப்பதற்கு மிகப் பொருத்தமானவர் என்ற அடிப்படையில் சஜித் பிரேமதாஸவை நாங்கள் ஆதரிப்பது என்றாலும் அவர் நாம் முக்கியமாக முன்வைக்கின்ற கோரிக்கைகளுக்கு சம்மதத்தை தெரிவிக்கின்ற பட்சத்தில் அந்த ஆதரவை நாங்கள் ஊர்ஜிதப்படுத்துவோம் எனத் தீர்மானித்திருக்கின்றோம்.

அதற்கமைவாக அடுத்துவரும் 72 மணித்தியாலயங்களுக்குள் அது சம்பந்தமான பேச்சு வார்த்தை அவருடன் மேற்கொள்ள இருக்கின்றேன். அவற்றிற்கு அவர் இணங்குகின்ற பட்சத்தில் எமது உறுப்பினர்கள் அனைவருக்கும் அறிவித்து சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக நாங்கள் மும்முரமாக ஈடுபட இருக்கின்றோம்.

அடிப்படை விடங்களில் உடன்படிக்கை காணப்படா விட்டால் மட்டும், அவர் அவ்வாறான விடயங்ளில் தலைவரோடு உடன்படவில்லை என்பதை தலைவர்உணர்ந்துகொள்ளக்கூடியதாக இருந்தால் மீண்டும் எங்களுடைய உயர்பீடத்தைக் கூட்டி இந்த முடிவை மீளாய்வு செய்ய நேரிடலாம். இப்பொழுது முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது அதை மீளாய்வு செய்வதனால் மீண்டும் உயர்பீடத்தினாலேயே அதனைச் செய்யலாம். அதனை நான் தனித்து மேற்கொள்ள முடியாது. முக்கியமான விடயங்களை எழுத்து மூலம் பெறுவோம். அவரது தேர்தல் முன்னெடுப்பை பாதிக்கும் விதத்தில் எங்கள் கோரிக்கை அமைந்திருக்கப் போவதில்லை.

எங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது. விஷேடமாக முஸ்லிம் காங்கிரஸின் ஒத்துழைப்பு அவருக்கு அவசியம் என்பதால் எங்களுடன் உடன்படுவார். நாங்கள் இவ்வளவு தூரம் பயனித்திருக்கின்றோம். ஒவ்வொரு பிரதேசத்திலும் எங்களது நிறைவேற்றப்படுகின்ற தேவைகளை எங்களது கட்சியின் அமைப்பாளர்கள் எனது கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றார்கள். அவற்றை அவரிடம் கூறுவேன். அவர் அவற்றைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். முன்னரும் அவரிடம் கதைத்த தேவைப்படுகளை பெரும்பாலும் மீண்டும் அவருக்கு நினைவூட்டவுள்ளேன். – என்றார்.

சஜித் பிரேமதாஸ இணங்காத பட்சத்தில் ரணில் விக்கிரமசிங்கவுடன் கதைப்பீர்களா என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது, அப்படியல்ல, அவ்வாறானால் அநுரகுமார திசாநாயக்கவுடனும் எங்களுக்குக் கதைக்கலாம் தானே என்றார் ஹக்கீம்.

அமைச்சர் பதவிகளைப் பற்றியெல்லாம் கோருகின்றீர்காளா என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது, அதுபற்றிப் பேசமாட்டோம், பதவிகள் அல்ல எங்களுக்கு முக்கியம. நான் ஆற்றமிக்க ஒரு தலைவன். பதவிகளில் இல்லாவிட்டாலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு விடயங்களை சாதிக்கத் தெரியும்.

கட்சி தாவும் – கரணமடிக்கும் – தலைமைத்துவம் அல்ல இது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கதைத்தீர்களா என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது, ஆம் கதைத்தோம். நான் மட்டுமல்ல நண்பர் மனோ கணேசனும் அவருடன் கதைத்தோம். அதாவது ரணிலும் சஜித்தும் ஒன்றாக இணங்கிசெயலாற்றுமாறுதான் நாங்கள் கதைத்தோம். அதற்கு ரணிலும் உடன்படவில்லை, சஜித்தும் உடன்படவில்லை. அதனால் கவலையடைந்தோம். ஜனாதிபதி ரணிலைப் பொறுத்தவரை தலைவருடன் நேரடியாகக் கதைக்காமல் எங்களது வேறு நபர்களுடன் கதைத்து அவர்களது ஒத்துழைப்பை பெற எத்தனித்து வருகின்றார். அதனால் முஸ்லிம் காங்கிரஸிக்குள் அதிருப்தி ஏற்பட்டிருக்கின்றது. – என்றார்.

# 2022 இல் நாமல் செய்த தவறால் எங்களது வீடுகள் தீக்கிரையாகின

## எஸ்.எம். சந்திரசேன கூறுகின்றார்

"நாமல் ராஜபக்ஷ உட்பட ஒரு தரப்பினர் 2022 மே 09ஆம் திகதி செய்த தவறால் எமது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இவர்கள் தவறு செய்ய நாங்கள் தண்டனை அனுபவித்தோம்."

– இவ்வாறு பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

"அநுராதபுரம் மாவட்ட மக்களின் அபிலாஷைக்கு அமைவாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தேன். நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவிட்டது. தற்போதைய முன்னேற்றத்தை தொடர வேண்டுமாயின் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மீண்டும் தோற்றம் பெற வேண்டும் என்று சாதாரண மக்கள் குறிப்பிடுகிறார்கள்.

மீண்டும் பரீட்சித்துப் பார்க்கும் நிலை



யில் நாடு இல்லை. நாட்டு மக்கள் தெளிவாக உள்ளார்கள். 2022ஆம் ஆண்டு பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியின்போது மாறுபட்ட அரசியல் கொள்கையுடைய ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்கு கட்சி எடுத்த தீர்மானத்துக்கு நாங்கள் நிபந்தனையற்ற வகையில் ஆதரவு வழங்கினோம்.

நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தை ஏற்க போவதில்லை. எமது மாவட்ட மக்களின் தீர்மானத்துக்கு அமையவே ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்துள்ளேன். எனது தீர்மானத்தில் மாற்றமில்லை. கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களின் நிலைப்பாட்டுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

பொதுஜன பெரமுனவின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கியவர்கள் தொடர்பில் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அறகலயவின்போது அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டமை சிறந்தது என்று அவர் குறிப்பிட்டுள்ளமை முறையற்றது.

நாமல் ராஜபக்ஷ உட்பட தரப்பினர் 2022.05.09 ஆம் திகதி செய்த தவறினால்தான் எமது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இவர்கள்தான் போராட்டக்களத்துக்கு தாக்குதல் நடத்தும் வகையில் அரசியல் கூட்டங்களை நடத்தினார்கள். இதன் பின்னர்தான் அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரளவும் படுகொலை செய்யப்பட்டார். இவர்கள் இழைத்த குற்றத்துக்கு நாங்கள் தண்டனை அனுபவித்தோம்."– என்றார்.



# அரவிந்தகுமார் தரப்பு ரணிலுக்கு ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு ஐக்கிய தொழிலாளர் முன்னணி தீர்மானித்துள்ளது என்று அதன் தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான அருணாசலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

பதுளையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில் –

"ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது என எதிரணிகள் போலித் தகவல்களை பரப்பிவந்தன. தற்போது தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார். எனவே, எதிரணிகளின் குற்றச்சாட்டுகள் போலியானவை என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஆராய்ந்து, இந்நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்லக்கூடிய தலைவரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு நாம் தீர்மானித்தோம். செப்டம்பர் 21 ஆம் திகதி அவர் ஜனாதிபதியாவார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை தொடர்பில் நாம் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினோம். அதற்கு தொழிலாளர்களுக்கு நன்மை பயக்ககூடிய வகையில் தீர்வு கிட்டும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

காணி மற்றும் வீட்டுரிமை தொடர்பான கோரிக்கையும் எம்மால் முன் வைக்கப்பட்டது. அந்த கோரிக்கையையும் அவர் ஏற்றுக்கொண்டார்."– என்றார்.

# மூர்க்கத்தனமான ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முதன்மை பொறுப்பை ஆசிரியர்களே ஆற்றுவார்கள்

## கே. டீ. லால்காந்த நம்பிக்கை



"தேர்தல் எனும் போராட்டக் களத்திற்கு இதற்கு முன்னர் இந்த பெயரளவிலான பிரபுக்கள் எம்மை வரவிடவில்லை. ஒருசில இடதுசாரி சக்திகளுக்கு சிறிய சிலவற்றைக் கொடுத்து அடக்கியாண்டார்கள். அடக்கமுடியாமல்போன தலைவர்களை படுகொலை செய்தார்கள்."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப்பேரவை உறுப்பினர், தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் கே.டீ.லால்காந்த தெரிவித்தார்.

மாளிகாவத்தையில் இடம்பெற்ற இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய ஆசிரியர் மாநாட்டில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையிலேயே கே.டீ.லால்காந்த மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது இவர் மேலும் தெரிவிக்கையில் –

"எமது நாட்டின் ஆசிரியர்கள்தான் கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புகின்ற போராட்டத்தை ஆரம்பித்து வைத்தவர்கள். கோட்டாபயவின் ஆட்சிக்கு எதிராக ஆசிரியர்கள், அதிபர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர் அரசியல் விமர்சகர்கள் கடந்த காலத்தில் எழுதியிருந்தார்கள். அதைப்போலவே 76 வருடகால மூர்க்கத்தனமான ஆட்சிக்கு முற்றுப்பள்ளி வைக்கின்ற முதன்மைச் செயற்பொறுப்பினை ஆற்றுவதும் ஆசிரியர்களே என்பதை நாங்கள் நம்புகிறோம்.

இன்று இந்த மாநாட்டுக்கு வந்து நீங்கள் இந்த நாட்டின் பல அரசியல் வாதிகளை பயமுறுத்தி இருக்கிறீர்கள். முதன்முதலில் பயந்தவர் சஜித் பிரேமதாஸ. அடுத்ததாக ரணிலை பயமுறுத்தினீர்கள். இன்று பிற்போக்கான சக்திகள் அனைத்துமே பயந்துள்ளன. முற்போக்கான சக்திகள் அனைத்துமே மகிழ்ச்சியடைந்துள்ளன. செப்டெம்பர் 21 வெற்றியை நீங்கள் உறுதி செய்திருக்கிறீர்கள். இதுவரை காலமும் வெற்றிபெற்றிராத முற்போக்காளர் களினதும் பாதிக்கப்படவர்களினதும் வெற்றியை இந்த ஆசிரியர் மாநாடே உறுதிசெய்துள்ளது என்பது திண்ணம்.

ஆசிரியர் சம்பளம் மற்றும் ஏனைய பிரச்சினைகள் சம்பந்தமாக கடந்த காலத்தில்நாங்கள்பலபோராட்டங்களை நடாத்தினோம். தேர்தல் எனும் போராட்டக் களத்திற்கு இதற்கு முன்னர் இந்த பெயரளவிலான பிரபுக்கள் எம்மை வரவிடவில்லை. ஒருசில இடதுசாரி சக்திகளுக்கு சிறிய சிலவற்றைக் கொடுத்து அடக்கியாண்டார்கள். அடக்கமுடியாமல்போன தலைவர்களை படுகொலை செய்தார்கள்.

இலங்கையில் முதல் தடவையாக தேர்தல் போராட்டக் களத்திற்கு பாதிக்கப்பட்ட மற்றும் முற்போக்கான சக்திகளுடன் 'திசைகாட்டி' ஒன்றுசேர்ந்து போராட்டக் களத்தின் கொடியை உயர்த்திப்பிடித்து வெற்றிகீதம் இசைத்துக் கொண்டிருக்கின்ற வேளையில்தான் இன்று இந்த மாநாடு நடைபெறுகின்றது.

தேர்தல் போராட்டக் களத்திற்காக தமது ஊரில் இருக்கின்ற அமைப்புகளுடன் தொடர்புபட்டு வாக்குப்பெட்டியை திசைகாட்டிக்கு புள்ளடியிட்ட மூன்றிலிரண்டு பங்கு வாக்குகளால் நிரப்புங்கள். அந்த தேர்தல் களத்தில் பெருவெற்றிபெற்று 'மறுமலர்ச்சி யுகத்திற்கு' அத்திவாரத்தை அமைத்துக்கொடுக்குமாறு அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறோம்.

ஆசிரியர் என்ற வகையிலும் தாய்மார் என்றவகையிலும் நாட்டில் நிலவுகின்ற பிரச்சினையை நாங்கள் அதிகமாக உணர்கிறோம். இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் விஷாகா அபேரத்ன இன்றைய சமூகம் எந்த நிலையில் இருக்கின்றதென்பது பற்றிய ஒரு பொதுவான புரிந்துணர்வு எமக்கு இருக்கின்றது. ஆசிரியத்தொழிலில் அதிகமாக இருக்கின்றவர்கள் அன்புக்குரிய ஆசிரியைகளே. அவர்கள் இந்த நாட்டில் வசிக்கின்ற தாய்மார்கள் ஆவர்.

நாங்கள் அந்த பிரச்சினை தொடர்பில் அதிகமான கூருணர்வு கொண்டிருக்கிறோம். சமையலறையில் அடுப்பில் மூட்டப்படுகின்ற நெருப்பினைவிட இதயத்தில் அதிகமான நெருப்பு எரிகின்றதென்பதை நாங்கள் அறிவோம். வகுப்பறையில் வேதனைகளை வெளிப்படுத்திக்கொள்ளக்கூட முடியமல் இருக்கின்ற பிள்ளைகளை நாங்கள் காண்கிறோம்.

சமூகவலைத்தளங்களில் இந்த பிள்ளைகளின் உணவு வேளைகள் பற்றிய தகவல்களை வெளிக் கொணர்ந்திருந்தார்கள். இரண்டு மூன்று பிள்ளைகள் இருக்கின்ற குடும்பங்களில் எந்தப் பிள்ளைக்கு கல்வி புகட்டுவது எனும் கேள்வி எழுகின்றது.

எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை கட்டியழுப்ப வேண்டுமென்ற ஏகோபித்த எதிர்பார்ப்பு இருக்கின்றது. இந்த எதிர்பார்ப்பினை சுமந்துகொண்டு இங்கு வந்து புதிய மறுமலர்ச்சிக்காக மேலும் ஊக்கத்துடன் செயற்படுவோமென கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்சார் போராட்டங்களில் ஈடுபட்டாலும் நாட்டின் முன்னிலையில் அளப்பரிய பொறுப்பு எம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளது . இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச்செயலாளர் மஹிந்த ஜயசிங்க ஆசிரியரை எங்குதான் துன்பத்திற்கு இலக்காக்கவில்லை? ஒட்டுமொத்த மக்களைப்போன்றே ஆசிரியர்களையும் துன்பத்தில் ஆழ்த்துவதற்கு எதிராக ஒரே கூட்டத்தில்சேர்ந்து கடந்தகாலம் பூராவிலும் போராட்டங்களில் ஈடுபட்டோம்.

இந்த ஒற்றுமையை சிதைக்க நிகழ்கால அரசாங்கமும் எதிர்க்கட்சியும் பல்வேறு சதிவேலைகளை செய்தன. அந்த சதிவேலைகள் அனைத்துமே தோல்விகண்டுள்ளதென்பதை இந்த மாபெரும் தேசிய மாநாடு உறுதிசெய்துள்ளது. இந்த மைதானம் அதிபர்களாலும் ஆசிரியர்களாலும் நிரம்பி வழிவதன் மூலமாக அந்த வெற்றிபற்றிய செய்தியே பறைசாற்றப்படுகின்றது. அனைத்துவிதமான துன்பங்களாலும் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் அதிலிருந்து விடுபடுவதற்கான சரியான வழியைக் காட்டவே இந்த மாநாடு நடாத்தப்படுகின்றது." – என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.08.2024




இன்று தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். இதிலிருந்து பயனுள்ளதை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலைத் தரும்.

பணிகள் அதிகமாக காணப்படும். இன்று சூழ்நிலை அந்தளவு சாதகமாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை ஏற்படும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை வெற்றிகரமாக ஏற்படுத்த அனுசரித்து போகும் அணுகுமுறை தேவை.

ஆன்மீக நோக்கத்துக்கும் பயணத்துக்கும் பணத்தை செலவு செய்வீர்கள். இதில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

கண்ணுக்கான சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பல்வலிக்கான வாய்ப்பும் உள்ளது.




நீங்கள் எடுக்கும் முயற்சியில் தடைகளைக் காண்பீர்கள். அதிக சிந்தனையை தவிர்க்க வேண்டும் உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். இன்றைய சூழ்நிலையை சமாளிப்பதை சற்று கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மோதல் நேரலாம். அமைதியாகவும் சூழ்நிலைக்கேற்றவாறும் இருந்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

நீங்கள் சம்பாதிக்கும் பணம் போதுமானதாக காணப்படாது. பணம் இழந்துவிடுவோமோ என்ற பயம் உங்களிடம் காணப்படும். முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கலாம். உங்கள் நண்பர்களை வெல்வீர்கள்.இது பயன்தரத் தக்கதாக இருக்கும். நேர்மறையான மன நிலையோடு இன்றைய தினத்தில் செயல்களை மேற்கொள்வீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். பணியில் உங்களை மேம்படுத்திக்கொள்ள மிகுந்த வாய்ப்புகள் கிடைக்கும். உங்களுக்கு நற்பெயர் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவை பராமரிப்பீர்கள். நேர்மையான அணுகுமுறை மூலம் இது சாத்தியமாகும். பணம் அதிக அளவில் காணப்படும். சாதுர்யமாக பணத்தை செலவு செய்ய இன்றைய நாளை பயன்படுத்துவீர்கள்.




இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். வேதனைப்படும் சூழ்நிலைகள் உருவாகும். நண்பர்களின் ஆதரவு குறையும். சற்று கவனமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. இதனால் கவலை ஏற்படும்.

உங்களின் அமைதியற்ற மனநிலை உறவை பாதிக்கும். நல்ல புரிந்துணர்வுக்கு உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று சிறிதளவு பணமே காணப்படும். அதிகமாக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும். வீட்டின் புனரமைப்பிற்கான செலவாக அது இருக்கலாம்.

இன்று காய்ச்சலுக்கு ஆளாக நேரலாம்.




இன்று பொறுப்புகளை அதிகமாக சுமக்க நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். என்றாலும் உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் இதனை சமாளிப்பீர்கள்.

கடின உழைப்பு காணப்படுகின்றது. என்றாலும் நீங்கள் வெற்றி பெற இயலாது. முறையாக திட்டமிடாததே இதற்கு காரணமாக இருக்கும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இந்த உணர்வு உங்கள் உறவை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவு இருக்காது. நிதிநிலையை நன்கு பராமரிக்க வேண்டும். லாபமும் இருக்காது. நஷ்டமும் இருக்காது. இன்று பதற்றம் காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் அதன் தாக்கம் காணப்படும்.




இன்று சில சாதகமற்ற பலன்கள் கிடைக்கும். உங்கள் வாழ்வில் சில மாற்றங்களை சந்திப்பீர்கள். பயணங்கள் காணப்படும். தெளிவான மனதுடன் செயற்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணி நிமித்த பயணம் காணப்படும். சவாலான சூழ்நிலைகளை சந்திப்பீர்கள். தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

இன்று உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். இதனால் உறவில் புரிந்துணர்வை பாதிகாக்க முடியும்.

இன்று பண வரவு குறைவாக காணப்படும். குடும்பத்திற்காக உங்களிடம் உள்ள பணத்தை செலவு செய்வீர்கள்.

தூக்கப் பிரச்சினை காரணமாக இன்று உங்களிடம் பதற்றம் காணப்படும்.




உங்கள் மகிழ்ச்சி மற்றும் சௌகரியங்களை வளர்த்துக் கொள்வீர்கள். என்றாலும் சில தடைகளை நீங்கள் சந்திப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக்கொள்ள இன்றைய நாளை பயன்படுத்துங்கள்.

சில தடைகளுக்குப் பிறகு வெற்றி காண்பீர்கள். திட்டமிட்டு சிறப்பாக பணியாற்றினால் இன்று உங்கள் பணியில் திருப்தி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்கும் வாய்ப்பு உள்ளது. நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். சிறு கடன் வகையில் இன்று பண வரவு காணப்படும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது. என்றாலும் ஆரோக்கியத்தைப் பராமரிக்க நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.




இன்று சிறப்பான நாள். எதிர்பாராத நன்மைகள் ஏற்படும் நாள். உங்கள் சமயோசித புத்தி மூலம் இன்றைய நாளை கழிப்பீர்கள்.

உங்கள் பணியின் தரம் மேலதிகாரிகளால் பாராட்டப் படும். பணிகளை ஆற்றும் போது உங்கள் அணுகுமுறையில் வேகம் காணப்படும்.

இன்று மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இன்றைய நாளையும் மகிழ்ச்சியாக்குவீர்கள்.

பணபுழக்கம் போதுமானதாக இருக்கும். காப்பீடு மற்றும் பூர்வீக சொத்து மூலம் உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். எனவே ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.08.2024




இன்று வெற்றி காண்பதற்கு அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டியது அவசியம். அவசர முடிவுகள் இன்று எந்தப் பயனையும் அளிக்காது.

பணியில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் சரியாக திட்டமிட வேண்டும். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கண்டிப்பும் கறாருமாக இருப்பீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். சகஜமான அணுகுமுறை மூலம் உறவில் நெருக்கம் காணலாம்.

பயணத்தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும். பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் அவசரப் போக்கு காரணமாக இன்று நீங்கள் பல வாய்ப்புகளை இழக்க நேரும். புத்திசாலித்தனமாக இருப்பது நல்லது. விவேகத்துடன் நடந்து கொள்வது நல்லது.

பணியிடத்தில் இன்றைய நாள் சிறப்பாக இருக்காது. உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். பணியை இழப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

உங்களிடம் பாதுப்பின்மை உணர்வு காணப்படும். இதை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இந்த உணர்வு இந்நாளின் மகிழ்ச்சி யை பாதிக்கும்.

உங்கள் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக பணத்தை இழப்பீர்கள். இன்று நிதி வளர்ச்சி காண்பது கடினமாக இருக்கும்.




இன்று ஆக்க பூர்வமான நாளாக இருக்கும். திறமை மூலம் நல்ல பலன்களைப் பெறலாம். நீண்ட கால திட்டங்களுக்கு இன்றைய நாளைப் பயன்படுத்தலாம். ஆன்மீக ஈடுபாடு நல்ல பலன் தரும்.

இன்று பணியில் உங்கள் திறமையை வெளிப்படுத்தும் நாள். இன்று அபாரமான திறமையை வெளிபடுத்துவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று அன்புக்கும் காதலுக்கும் உரிய நாள். உங்கள் நகைச்சுவை மற்றும் காதல் உணர்வு மூலம் உங்கள் பிரியமானவரை மகிழ்விப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படும். உங்கள் நிதி மற்றும் பயனுள்ள முதலீடு பற்றி இன்று விரைந்து முடிவெடுப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆற்றலும் தன்னம்பிக்கையும் நிறைந்து காணப்படும்.




இன்று நீங்கள் எடுக்கும் முயற்சியில் நல்ல பலன் கிடைக்கும். நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்களுக்கு வெற்றி எளிதில் நிச்சயம் கிடைக்கும்.

இன்று பணிகள் சுமுகமாக நடக்கும். பணியில் முன்னேற்றம் காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பை வளர்த்துக் கொள்வீர்கள். இருவரும் மகிழ்ச்சியை பகிர்ந்துகொள்ள இது உதவும்.

பணம் அபரிமிதமாக காணப்படும். ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் பண வரவுக்கு வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.





